## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 3-6 - செய்யதாமரை
## (கைங்கர்யம் செய்வதற்குப் பர வ்யூஹ விபவங்களைக் காட்டிலும் அர்ச்சாவதாரமே எளிதென்று அருளிச் செய்தல்)

2952 * செய்ய தாமரைக் கண்ணனாய் *
உலகேழும் உண்ட அவன் கண்டீர் *
வையம் வானம் மனிசர் தெய்வம் *
மற்றும் மற்றும் மற்றும் முற்றுமாய் **
செய்ய சூழ் சுடர் ஞானமாய் *
வெளிப்பட்டிவை படைத்தான் * பின்னும்
மொய்கொள் சோதியோடு ஆயினான் * ஒரு
மூவர் ஆகிய மூர்த்தியே 1

2953 மூவராகிய மூர்த்தியை * முதல்
மூவர்க்கும் முதல்வன் தன்னை *
சாவமுள்ளன நீக்குவானைத் *
தடங்கடல் கிடந்தான் தன்னைத் **
தேவதேவனைத் தென்னிலங்கை *
எரியெழச் செற்ற வில்லியை *
பாவ நாசனைப் பங்கயத் தடங்
கண்ணனைப் * பரவுமினோ 2

2954 பரவி வானவர் ஏத்த நின்ற *
பரமனைப் பரஞ்சோதியை *
குரவை கோத்த குழகனை *
மணிவண்ணனைக் குடக் கூத்தனை **
அரவமேறி அலைகடல் அமரும் *
துயில் கொண்ட அண்ணலை *
இரவும் நன்பகலும் விடாது * என்றும்
ஏத்துதல் மனம் வைம்மினோ 3

2955 வைம்மின் நும் மனத்து என்று * யான்
உரைக்கின்ற மாயவன் சீர்மையை *
எம்மனோர்கள் உரைப்பதென்? * அது
நிற்க நாள்தொறும் ** வானவர்
தம்மை ஆளும் அவனும் * நான்முகனும்
சடைமுடி அண்ணலும் *
செம்மையால் அவன் பாத பங்கயம் *
சிந்தித்து ஏத்தித் திரிவரே 4

2956 திரியும் கற்றொடு அகல்விசும்பு *

திணிந்த மண் கிடந்த கடல் *
எரியும் தீயோடு இருசுடர் தெய்வம் *
மற்றும் மற்றும் முற்றுமாய் **
கரிய மேனியன் செய்ய தாமரைக்
கண்ணன் * கண்ணன் விண்ணோர் இறை *
சுரியும் பல்கருங்குஞ்சி * எங்கள்
சுடர்முடி அண்ணல் தோற்றமே 5

2957 தோற்றக் கேடவை இல்லவன் உடையான் *
அவன் ஒரு மூர்த்தியாய் *
சீற்றத்தோடு அருள் பெற்றவன் * அடிக்
கீழ்ப் புக நின்ற செங்கண்மால் **
நாற்றத் தோற்றச் சுவையொலி *
உறலாகி நின்ற * எம் வானவர்
ஏற்றையே அன்றி * மற்றொருவரை
யான் இலேன் எழுமைக்குமே 6

2958 எழுமைக்கும் எனதாவிக்கு *
இன்னமுதத்தினை எனதாருயிர் *
கெழுமிய கதிர்ச்சோதியை * மணி
வண்ணனைக் குடக் கூத்தனை **
விழுமிய அமரர் முனிவர் *
விழுங்கும் * கன்னல் கனியினை *
தொழுமின் தூய மனத்தராய் *
இறையும் நில்லா துயரங்களே 7

2959 துயரமே தரு துன்ப இன்ப
வினைகளாய் * அவை அல்லனாய் *
உயர நின்றதோர் சோதியாய் *
உலகேழும் உண்டு உமிழ்ந்தான் தன்னை **
அயர வாங்கு நமன் தமர்க்கு *
அருநஞ்சினை அச்சுதன் தன்னை *
தயரதற்கு மகன் தன்னை அன்றி *
மற்றிலேன் தஞ்சமாகவே 8

2960 தஞ்சமாகிய தந்தை தாயொடு *
தானுமாய் அவை அல்லனாய் *
எஞ்சலில் அமரர் குல முதல் *
மூவர் தம்முள்ளும் ஆதியை **
அஞ்சி நீருலகத்துள்ளீர்கள்! *
அவன் இவன் என்று கூழேன்மின் *
நெஞ்சினால் நினைப்பான் யவன் *
அவனாகும் நீள்கடல் வண்ணனே 9

2961 கடல்வண்ணன் கண்ணன் * விண்ணவர்
கருமாணிக்கம் எனதாருயிர் *
பட அரவின் அணைக் கிடந்த *
பரஞ்சுடர் பண்டு நூற்றுவர் **
அடவரும் படை மங்க * ஐவர்கட்காகி
வெஞ்சமத்து * அன்று தேர்
கடவிய பெருமான் * கனைகழல்
காண்பது என்று கொல் கண்களே? 10

2962 * கண்கள் காண்டற்கரியனாய்க் *
கருத்துக்கு நன்றும் எளியனாய் *
மண்கொள் ஞாலத்து உயிர்க்கெல்லாம் * அருள்
செய்யும் வானவர் ஈசனை **
பண்கொள் சோலை வழுதி நாடன் *
குருகைக் கோன் சடகோபன் சொல் *
பண்கொள் ஆயிரத்து இப்பத்தால் *
பத்தராகக் கூடும் பயிலுமினே[1] 11

**அடிவரவு:** செய்ய மூவர் பரவி வைமின் திரியும் தோற்ற எழுமை துயரம்
தஞ்சம் கடல் கண்கள் பயிலும்

[1] பயின்மினே